செ.வெ.எண்.375 நாள்.11.06.2018.

திருநெல்வேலி மாவட்டத்தில் குழந்தை தொழிலாளர் ஒழிப்புவதற்கான விழிப்புணர்வு ஸ்கேட்டிங் பேரணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

--------

தேசிய குழந்தை தொழிலாளர்கள் முறையினை ஒழிப்பதற்கான விழிப்புணர்வு பள்ளி மாணவர்கள் கலந்து கொண்ட பேரணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் பாளையங்கோட்டை பேருந்து நிலையத்தில் இன்று **(11.06.2018)** துவக்கி வைத்தார். இப்பேரணி பாளையங்கோட்டை பேருந்து நிலையத்தில் துவங்கி வ.உ.சி. மைதானம் , முருகன் குறிச்சி, வண்ணார்பேட்டை வழியாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நிறைவடைந்தது.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

தேசிய குழந்தை தொழிலாளர் திட்டம், மத்திய–மாநில அரசுகள் மூலம் குழந்தை தொழிலாளர்களை ஒழிப்பதற்கான முழுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும் இதுவரை 5473 குழந்தைகள் மீட்கப்பட்டு, முறையான பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், 5408 குழந்தைகள் மீட்கப்பட்டு, தொழிற்கல்வி கற்று நல்வழி படுத்தப்பட்டுள்ளார்கள். குழந்தைகள் தொழிலாளர்களாக கண்டறியப்படும் குழந்தைகள் இத்திட்டத்தின் மூலம் நடத்தப்படும் சிறப்பு பயிற்சி மையங்களில் சேர்க்கப்பட்டு ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளில் கல்வியில் ஆர்வமூட்டப்பட்டு, முறையான பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர். பயிற்சி மையங்களில் சேர்க்கப்படும் குழந்தைகளுக்கு இலவசமாக கல்வி உபகரணங்கள், சீருடைகள், மதிய உணவு இவற்றுடன் மாத ஊக்கத் தொகையாக குழந்தைகளின் வங்கி கணக்கில் பிரதி மாதம் ரூ.400/– நேரடியாக செலுத்தப்படுகிறது. சிறப்பு பயிற்சி மையங்களில் பயின்ற தற்போது கல்லூரியில் மேற்படிப்பு பயிலும் 26 மாணவ, மாணவிகளுக்கு ஒரு கல்வி ஆண்டுக்கு ரூ.6000/– ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. மேலும், குழந்தை தொழிலாளர்களை பணியமர்த்தும் நிறுவனங்களுக்கு ரூ.50 ஆயிரம் அபராதத்துடன், சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

குழந்தை தொழிலாளர் ஒழிப்புவதற்கான விழிப்புணர்வு ஸ்கேட்டிங் பேரணியில் கலந்து கொண்ட அனைத்து பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், திருநெல்வேலி கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, தேசிய குழந்தைகள் தொழிலாளர் திட்ட இயக்குநர் திரு.சந்திரகுமார், திட்ட மேலாளர் திரு.விஸ்வநாதன், கள பணியாளர்கள் திரு.ரவீந்திரன், திரு.சேதுராமன், திருமதி.ராஜேஸ்வரி, தொழிலாளர் துணை ஆய்வாளர்கள், தொழிலாளர் உதவி ஆய்வாளர்கள், சைல்டு லைன் பணியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள், பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.